# தவறிய சொல்

முதுமையில் உடல் ஒடுங்கும் பொழுது உள்ளமும் அடங்கத்தான் வேண்டுமா? பூம்புனல் வெள்ளம்போல் ஓடவிடாமல் மனதை நிறுத்திப் பிடிக்க வேண்டியது அவசியம்தான், யோகியரின் உள்ளங்கள் ஒடுங்கட்டும். ஆனால் அம்பாரம் சம்சாரத்தில் பெருந்தலைப்பாட்டனாராக உலவுகிற கிழவர் பசுபதிக்கு இதயம் குறுக வேண்டியது அவசியமில்லை. அவருடைய எழுபத்தாறு வயசைச் சொன்னால், "பற்று பாசங்களை ஒடுக்க வேண்டியவர்" என்று தான் யாரும் நினைப்பார். அவர், காசிக்குப் போக வேண்டும் என்று ஆசைப்பட்டார் விரக்தி மனப்பான்மையில் அல்ல, சபலத்தினால் தான்!

இதற்கு முன்பு காசிக்குப் போயிருக்கிறார்; அதனால், திருப்தியாகத்தானிருந்தார். கங்கையில் நீராடிய பேறு கிட்டியது என்று. காசியையும் கங்கையையும் மறந்தே இருந்தார். இருக்கிற இடத்திலேயே சந்தோஷமாக வாழ்ந்து, கடல் போன்ற குடும்பத்தின் கலங்கரை விளக்குப் போல விளங்கி, தமது பிறவிப்பயனைப் பெற்றுப் போய்ச் சேர வேண்டும் என்பது தான் பசுபதியின் வேதாந்தம். அப்படிப்பட்டவருக்கு சபலம் தான் வந்துவிட்டது. காரணம் அவருடைய பேரன் பசுபதீஸ்வரன்தான். காசி சர்வகலாசாலையில் இரண்டாண்டுப் படிப்புக்காக ஈசுவரன் புறப்பட்டான்.

முதன் முதலாக ஆயிரம் மைல் பயணம் செய்யவிருந்த பேரனைப் பசுபதி மிகவும் பரிவுடன் பார்த்தார். "காசிக்குப் போகிற வயசாடா உனக்கு?" என்று குறும்பாக வினாவினாலும், உள்ளூர ஆதங்கம், "அத்தனைத்தூரம் போகிறானே!" என்று. ஈசுவரனின் அன்னைக்கு இஷ்டமே இல்லை. "முன்னே பின்னே வடக்கே போனதில்லையே!" என்று சங்கடப்பட்டாள்.

கல்வி கற்பதற்கென்று தனித்து வேற்றூர் செல்லுகின்ற குதூகலத்தினிடையே ஈசுவரன், "வருகிறீர்களா, தாத்தா?" என்று கேட்டு வைத்தான், விளையாட்டாக.

"நானா? சரித்தான்" என்றார் தாத்தா சிரித்தபடி. அவன் பெட்டி படுக்கைகளைக் கட்டி வைத்த பொழுது வீட்டில் எல்லோரும் உற்சாகமாகத்தான் உதவிகள் செய்து அவனை வழியனுப்பத் தயாரானார்கள். வாசலில் வில் வண்டி வந்து நின்றது.

"ஈசுவரன், நீ ஹாஸ்டலில் தான் இருக்கப் போகிறாய். ஒரு சமயம் நான் திடுதிப்பென்று வருகிறேன் காசிக்கு. உன்னோடு இருக்க முடியுமா? அங்கங்கே கொஞ்சம் விசாரித்து வை. எனக்கு நாலு மாசம் தங்குவதற்கு ஒரு ஜாகை பார்த்துவை. வருகிறேன் நான். காசி என்றால் ஆசையாகத்தான் இருக்கிறது எனக்கும்" என்றார் பசுபதி.

"ஆகட்டும் தாத்தா. முடியுமானால் அம்மா அப்பா எல்லோருமே வரலாமே!" என்றான் ஈசுவரன்.

"நீ லீவுக்கெல்லாம் வரமாட்டியா அண்ணா?" என்று கவலையுடன் விசாரித்தாள் அன்புத் தங்கை.

"நீ வராவிட்டால் நாங்களே வந்துவிடுவோம்! தாத்தா கூட்டிக் கொண்டு வருவார்!" என்றாள் இன்னொரு தங்கை. தாத்தாவின் பக்கபலமிருந்தாலும், அது போதாமல், தமையனின் கைகளைப் பற்றிக் கொண்டு, ஏக்கம் விளம்பும் நோக்குடன் நின்றாள் அவள்.

"என்னவோ விசேஷம்; அண்ணா ஜம்முன்னு ஊருக்குப் போகிறான்!" என்று பரபரப்பில் வளைய வந்தார்கள், சின்னத் தம்பிகள். சிரமப்பட்டுக் கைகளை விடுவித்துக் கொண்டு வண்டியில் ஏறினான் ஈசுவரன். ரயிலில் ஏற்றி விடுவதற்கு அவனுடைய தந்தை சென்றார்.

"காசிக்குப் போய்ச் சேர எத்தனை நாளாகும்? காசி எப்படியிருக்கும்?" என்றெல்லாம் தாத்தாவைக் கேட்டார்கள் குழந்தைகள். 'நேற்கு முழுதும் தான் அதைப் பற்றிப் பேசினோமே!' என்று அலுப்பவரா தாத்தா? 'சொன்னதையே சொல்லுகிறோமே!' என்று நினைவு வைத்துக் கொள்ளுகிற பருவமல்லவே! ஆவலாகச் செவிமடுத்திடும் குழந்தைகளுக்குச் சளைக்காமல் மீண்டும் சொன்னார்.

* * *

பிரிந்திருந்த பழக்கப்படாததினால் ஏற்கெனவே கலங்கிப் கொண்டிருந்தவர்களுக்குக் கவலையை அதிகப்படுத்திவிட்டன பத்திரிக்கைள். வட நாட்டில் மழைக் காலத்திலே வெள்ளப் பெருக்கும் ஜனங்கள் துன்பப்படுவதும் ஆண்டுதோறும் உண்டு. ஆனால், ஈசுவரன் வடக்கே இருக்கிறான் என்பதனால் தினசரிச் செய்திகளை அதிக நாட்டமுடன் கவனித்து வந்தார்கள் இங்கே. முந்திய வருடங்களில் வந்த வெள்ளங்களை விட அதிகம் என்று அறிந்து திகில் கொண்டு, "அங்கே அபாயம்; புறப்பட்டு வந்துசேர்" என்று தந்தி கூட அடித்தார்கள்.

"வழியில் தான் அபாயங்கள். ரயில்கள் போக்குவரத்தும் நேரில்லை. நான் வரவேண்டிய அவசியமில்லை. கவலைப்பட வேண்டாம்" என்று விடையைத் தந்தியிலேயே அளித்தான் ஈசுவரன். தந்தியைப் பிரிப்பதற்குள் கதிகலங்கி நின்றாள் தாயார், 'ஈசுவரன் தவறிவிட்டான் என்று யாராவது செய்தி அனுப்பியிருக்கிறார்களோ' என்ற பயம்! போதாக் குறைக்கு வாசகத்தில் சொற்பிரிவுகளுக்கிடையே ஓரிரண்டு எழுத்துக்கள், தந்தியை வாசித்தவரை சற்று தடுமாற வைத்தன. கணநேரம் என்றாலும் கனத்த நேரம் அது. ஈசுவரன் சரியாகத்தான் எழுதிக் கொடுத்தான். கட்டுக்கட ஆசாமிக்கு என்ன அவசரமோ? சூட்சுமக்குறைவோ? அவன் எழுத்தில்தானே தந்தி இருக்கும்?

எப்படியோ மூன்று மாதங்களை ஒட்டினார்கள். நவராத்திரி விடுமுறை வந்தது. கணக்குக்கு மாதங்கள் என்ற பெயரே தவிர, நெடுங்காலப் பிரிவைப்போல் துயரம் கவிந்தது அன்புள்ளங்களிலே. "வருகிறேனே" என்று சொல்ல ஈசுவரன் கூசினான். "உனக்கு அலைச்சல்தான், ஆனால் வரமுடியும் என்றால் வாயேன்" என்றனர் பெற்றோர். செலவையும் அலைச்சலையும் பார்த்து மனது அடங்கிவிடுமோ? ஊருக்கு வந்து சேர்ந்தான் ஈசுவரன். ஒவ்வொருவருக்கும் ஒரு பொருள் வாங்கி வந்தான்.

காசியைக் கண்டிராதவர் போன்று சில கேள்விகள் கேட்டார் பசுபதி. ஈசுவரன் சிரித்துவிட்டு, "என்ன தாத்தா, காசியில் ஒரே ஒரு நல்ல இடம், பார்க்க வேண்டிய இடம், எங்கள் யூனிவர்சிடி தான்!" என்றான்.

"நான் அதைத்தான் பார்த்ததில்லை. உன்னோடு வரத்தான் போகிறேன்" என்றார் தாத்தா, அழுத்தமாக.

"அதென்னவோ, போ உன் அம்மாவும் அப்பாவும் தவித்துப் போய்விட்டார்கள். எப்போதும் பார் ஈசுவரன் என்ன செய்கிறானோ, என்ன சாப்பிடுகிறானோ என்று நினைத்துக் கொள்வார்கள். எனக்கு அப்படித் தோன்றவில்லையா என்று கேட்கிறாயா? நாமும் தான் காசிக்குப் போகப் போகிறோமே என்ற எண்ணம் இருக்கிறதல்லவா? எனக்கு மனசு கஷ்டப்படவில்லை. பிரியமானவர்களைப் பிரிந்து பிரிந்து இருந்து பழக்கம் ஆகிவிட்டது எனக்கு. இப்போது நாலு மாசம் வீடுவாசல் நினைவில்லாமல் காசியில் இருந்துவிட்டு வரவேண்டும் என்று தானே ஆசையாக இருக்கிறது!" என்று கிழவர் 'காசிக்கே' திரும்பினார்.

"இங்கே இருக்கிறதனாலே காசியைப் பற்றி நினைக்கிறீர்கள், தாத்தா. காசிக்குப் போனால் இங்கே இருக்கிற வீடு வாசலைப் பற்றித்தான் நினைப்பீர்கள்!" என்றான் ஈசுவரன் சிரிக்காமலே. சொந்த ஊரை விட்டு அங்கே சென்ற பிறகல்லவோ அவன் தன் ஊரையும், ஊரிலுள்ள சில அழகான இடங்களையும், வீட்டையும், தோட்டத்தையும், கிணற்றடிப் பந்தலையும், முற்றத்து ஊஞ்சலையும் நினைத்துப்பார்த்திருக்கிறான்!

"வாஸ்தவம்" என்றதுடன் நிறுத்திக் கொண்டார் பசுபதி. உள்ளே சமையற்கட்டில் தயங்கியபடி இருக்கிறாளே, நாட்டுப் பெண் - ஈசுவரனின் தாய் - அவளுந்தான் சற்று ஆசை தீரப் பேச வேண்டுமல்லவா, மைந்தனுடன்? அவருடைய பிள்ளை ஈசுவரனின் தந்தை, எதிலும் அதிகம் பற்றுக்காட்டாதவராய், தானுண்டு தன் வேலையுண்டு என்னும் போக்குடைய பிறவி. "வந்தாயா? வா; சந்தோஷம்" என்று பிள்ளையை வரவேற்று விசாரித்ததுடன் திருப்தி. தாயார் அப்படியா?

பதினைந்து நாள் விடுமுறையையும் வெல்லப்பாகு வைத்துப் பக்குவப்படுத்திக்கொண்ட மாதிரிச் சுவைத்து ரசித்து விட்டு, காசிக்குக் கிளம்பினான் ஈசுவரன்.

"வேடிக்கையாகக் கூடக் கேட்கமாட்டேன் என்கிறாயே! வருகிறாயா தாத்தா என்று முதல் முதலில் நீ கேட்டபோது என் மனசு அதிலேயே நிறைந்து விட்டதேடா?" என்றார் பசுபதி தீனமாக.

"நான் அப்படிக் கேட்டதனால் தானே தாத்தா, உங்களுக்கு ஆசை வந்து விட்டது? வேடிக்கைக்குக் கேட்கிறதிலே என்ன பயன்? நீங்கள்தானே சொன்னீர்கள். ஹாஸ்டலில் என்னுடன் இருக்க முடியமா?"

"நான்தான் சொன்னேனடா; ஒரு ஜாகை பார்த்துவை; மடமோ இடமோ ஏற்பாடு செய் என்று சொன்னேனே. ஹாஸ்டலில் வந்து இருப்பேனா இந்தக் கிழம்?"

"ஆகட்டும் தாத்தா; இந்த தரம் போய் ஏற்பாடு செய்கிறேன், வாருங்கள். இப்போது தானே எனக்கே ஊரும் ஒரு வழியாகத் தெரிந்திருக்கிறது? பார்த்து ஏற்பாடு பண்ணுகிறேன்."

"இந்த வார்த்தை போதுமடா எனக்கு. சாவகாசமாய்ப் பாரு. உடம்பை அலட்டிக்காதேடா, கண்ணா" என்று சந்தோஷத்துடன் அடங்கிவிட்ட பாட்டனாரை ஈசுவரன் நன்றியுடன் பார்த்தான். செயலில் அனுசரணை வேண்டும்மென்று கூட வற்புறுத்துவதில்லை இந்தப் பெரியவர்கள்! வாய் வார்த்தை போதும்; இதமான சொல் போதும்! பாவம், இவரையா மற்ற பெரிய பிள்ளைகளும் நாட்டுப் பெண்களும் பேரன்களும் குறை சொல்லுகிறார்கள்! கடைசிப் பிள்ளை என்ற தனிப்பாசம்தான் ஒருகால் இந்த முதியவரை இந்த வீட்டில் இத்தனை அபிமானமுள்ளவராக வைத்திருக்கிறதோ?

என்னவெல்லாமோ எண்ணிக்கொண்டு, உற்றவர்களிடம் பிரியாவிடை பெற்று ஈசுவரன் பயணமானான் காசிக்கு. இம்முறை அவன் உள்ளத்தில் கலப்பில்லாத உவகையே இருந்தது. சென்ற தடவையைப் போல் தயக்கமில்லை, அச்சமில்லை, வேதனையில்லை. சொற்நாள் விடுமுறையானாலும், அதன் பயன் கற்பகமாக இருந்தது. பிரிவுத் துன்பம் கழன்றிருந்தது. இப்பொழுது காசிக்குப் போகிறானே, புதிசு என்ற முத்திரை இலங்க நிற்கமாட்டான். நண்பர்கள் இருக்கின்றனர் 'ஷொட்டு'ப் போட்டு வரவேற்பதற்கு. படிப்பு இருக்கிறது, கவனத்தைக் கவ்விப் பிடிக்க, அவனிடம் மதிப்பு வைத்து பாடங்களில் சந்தேகம் கேட்கும் பெண்களும் இருக்கிறார்கள்!

"நன்றாகத்தான் படிக்கிறார்கள். அந்தப் பெண்கள் கெட்டிக்காரிகள்தான் ஆனால் அதற்கேற்ற அடக்கமில்லையே!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அந்தப் பெண்களும், தங்களை மிஞ்சிய வயதும் படிப்பும் உத்தியோகமும் உடைய கணவர்களையே அடைய விரும்புவார்கள், அடக்கம் பெற்று விடுவார்கள் என்பதை ஈசுவரன் உணரவில்லை. அவனுக்கு அவர்களைப் பற்றிய சிந்தனையோ ஆராய்ச்சியோ ஏது?

ஆனால் வயசுக்கொத்த உணர்ச்சி இல்லாமல் போகவில்லை! தனக்கு வரவேண்டியவளைக் குறித்து நினைக்கத் தோன்றிவிட்டது! அவள் யாரோ, என்ன பேரோ? பாண்டி விளையாடுகிறவளோ? பரதம் ஆடுகிறவளோ?...... அவள் இப்பொழுது எங்கேயோ தான் காணாத இடத்தில், தாவணி மேலாக்கு அணிந்து குமரிப் பெண்ணாக இருப்பாள்....

ஈசுவரனுக்கு சிந்தனை திரும்பிவிட்டது, தங்கைகளைப் பற்றி. மூன்றே மாதங்களில் பெரியவள், பெரியவளாகி மேலாக்குப் போடுகிறாள்.

இன்னும் நான்கு வருஷங்களுக்குள் படிப்பு என்பது முடிந்து, வேலை என்றும் ஒன்று கிடைத்தது எங்கெல்லாம் போக வேண்டியிருக்குமோ? நல்ல பிள்ளைகளாக வரன்கள் தட்டுப்பட்டால் தங்கைக்குப் பார்க்க வேண்டிய கடமை தனக்கும் உண்டல்லவா என்று அக மகிழ்ந்தான் ஈசுவரன்.

"நாலு வருஷமா? இரண்டு வருஷத்தில் நடக்க வேண்டும்" என்று தாத்தா சொல்வாரோ?

சொல்லத்தான் சொல்லுவார். சிறு பெண்களுக்கு, தக்க பருவத்தில், இளவயதில் அழகு பொலியும் பொழுதே மணம் செய்விக்க வேண்டுமென்பது அவருடைய அனுபவ அபிப்பிராயம். "அழகை எல்லாம் படிப்புக்கும் உத்தியோகத்துக்கும் பறிகொடுக்க வேண்டுமா? ஒரு கணவன் முதலில் உரிமையாக்கிக் கொண்டு சந்தோஷப்படமாட்டானா? எதுவும் காலா காலத்தில் நடக்க வேண்டும்" என்பார்.

அவருடைய கருத்து சரிதான் என்பதாக ஒப்புக் கொள்ளும்படியாகத்தான் அவர் பேசுவார்! "நாலு வருஷத்திற்கு முன்பு எப்படியிருந்தாள்! கல்யாண மனையில் அவள் இருந்த கண்றாவி பார்த்து ////////// என்று சில உதாரணங்கள் காட்டியுமிருந்தார். அவர் சொற்படி தங்கைக்கு சீக்கிரமே கல்யாணம் நடந்தால் நடக்கட்டுமே! பெரியவர் ஒருவர் சொன்னால் கேட்க வேண்டியதுதான். தாத்தா தவறு சொல்லவும் மாட்டாரே....

தாத்தா, தங்கை, கலியாணம் என்று யோசனைகள் ரயிலில் தீவிரமாக இருந்தாலும், காசிக்கு வந்து கலாசாலையில் புகுந்ததும், படிப்பில் கவனமாக ஈடுபட்டான் ஈசுவரன். நாட்கள் விரைந்தோடின.

• • •

ஊரிலிருந்து கடிதங்கள் வரும். தாத்தாவும் ஓரிரண்டு கடிதங்கள் போட்டார். ஆனால் அவர், "வரட்டுமா? ஜாகை பார்த்தாயா?" என்று கேட்கவில்லை. வீட்டில் மற்றவர்களும், "காசிக்கு வர தாத்தாவுக்கு விருப்பமாயிற்றே, என்ன ஏற்பாடு செய்தாய்?" என்று கேட்கவேயில்லை. ஈசுவரனுக்கு சந்தேகம் வந்துவிட்டது. "காசிக்கு நீ போகிறாயே, நானும் வருகிறேன்" என்று குழந்தைத்தனமாகத் தான் தாத்தா சொன்னாரோ?

ஒரு நாள் அவன் ஓர் உறவினரை கங்கைக் கரையில் ஸ்நானத்தின்பொழுது சந்தித்தான். அவனுடைய நட்சத்திரத்தில் கிரகணம் பிடிக்கிறது என்றும், சிரத்தையாகக் கங்கையில் நீராடும்படியும் பசுபதியேதான் எழுதியிருந்தார். அந்த உறவினர், "சென்னைக்குப் புறப்படுகிறேன் நாளை" என்று தெரிவித்தபொழுது, ஈசுவரனுக்கு, "ஆகா!" என்று போந்தது ஆவல். ஊரல் எடுத்தது காலில். நாவில் ஜலம் ஊறிற்று. இன்று புறப்பட்டால்... இரண்டே நாளில் பட்டணம்; மறுநாள் காலையிலேயே வீட்டுச் சாப்பாடு; சுகமாக நிம்மதியாக..... இப்படித்தான் மனசு அலைந்தது கொஞ்ச நேரம். பிறகு அந்த நினைப்பே இல்லை. ஒரு சலனமும் இல்லை. அதுபோலத்தான் தாத்தாவும் 'காசி' என்று சப்புக்கொட்டியிருப்பார் போலும் என்று தோன்றிவிட்டது. சிரத்தையாகப் படித்துப் பரீட்சை எழுதிவிட்டுக் கோடை விடுமுறைக்கு ஊர் வந்து சேர்ந்தான்.

கொஞ்சங்கூட சந்தேகப்படாமல், நம்பிக்கையே உருவானவராக பசுபதி கேட்டுவிட்டார் கேள்வியை. "இடம் பார்த்து விட்டுத்தானே வந்தாய்? உன்னோட நானும் வரலாம் அல்லவா?"

"இல்லையே தாத்தா! நீங்கள் நிஜமாகத்தான் காசிக்கு வரவேண்டுமென்று ஆசைப்படுகிறீர்களா?"

"என்னடா இப்படிக் கேட்கிறே! நீ தான் என்னை நிஜமாகக் கேட்கிறாயோ, வேடிக்கை செய்கிறாயோ?"

இதுதான் மனசு. ஒவ்வொரு உயிரிலும் உள்ள முரண்பட்ட இயல்புகள் இப்படித்தான் இயங்கி, அறிந்தும் அறியாமலும் இருந்தும் இல்லாமலும் தங்களை வெளிப்படுத்திக் கொள்கின்றன.

தாத்தாவின் சுருங்கிய முகத்தை ஊன்றிப் பார்த்த ஈசுவரன் துணுக்கமுற்றான். கசப்பு, ஏமாற்றம், வேதனை, அவநம்பிக்கை எல்லாம் ஒருங்கு திரண்டாற்போல் ஒரு வலிப்பு அந்த முதிய முகத்திலே வெட்டியிழுப்பதைக் கண்டான். பெரியதொரு அபசாரம் செய்துவிட்டாற்போன்று அவனுடைய உள்ளம் குன்றிப் போனது.

"தாத்தாவுக்கு ரொம்ப ஏமாற்றம் அம்மா" என்றான் அன்னையிடம். "நீங்கள் யாராவது மறுபடி எழுதியிருக்கக் கூடாதா அம்மா?"

"என்னவோ தோன்றவில்லையே அப்பா. இன்னும் ஒரு வருஷப் படிப்பு உனக்கு இருக்கிறதே என்ற நினைப்புப் போலிருக்கிறது. உன்னை அவரசரப்படுத்தத் தோன்றவில்லை. அப்பா இதையெல்லாம் காதில் போட்டுக் கொள்கிறாரா சொல்லு. தாத்தாவும் எங்களிடம் ஒன்றும் சொல்லமாட்டார். ஆசை தீர நாலுமாசம் வெளியில் இருந்துவிட்டு வரவேண்டும் என்றிருக்கிறது, பாவம். ஏதோ வயதுக்கேற்ற ஆசைதானே! இந்தத் தடவை போய் இடம் பார்த்து வை, அனுப்பி வைக்கிறோம். வாஞ்சியைக் கூட்டிக் கொண்டு போகலாம் என்ற எண்ணம் இருக்கிறது. அவர் சமைத்துப் போட்டுவிடுவார். பாவம், தாத்தாவுக்குக் காசி ஆசையைச் சொல்லிக் கொள்ள கொஞ்சம் சங்கோஜமாக இருக்கிறது என்று நினைக்கிறேன். இப்பத்தான் எனக்கும் தெரிகிறது!" என்றாள் அவன் அன்னை!

அன்னை அளித்த திகைப்பை வாஞ்சி தீர்த்தார். "காசி நினைப்பு உன் தாத்தாவுக்கும் ரொம்ப; புறப்பட்டு வரச்சொல்லி நீ எழுதிவிட்டாய் என்று இரண்டு தடவை என்னை ஏமாற்றி தமாஷ் பண்ணினார்!" என்று அறிவித்தார் அவர்.

ஆம்; பசுபதிக்கு வாஞ்சியிடம் தான் தமது அந்தரங்கத்தைத் /////// மகிழ வசதியிருந்தது. மற்ற விஷயங்களில் தயக்கமோ கூச்சமோ படாதவர், இந்த விஷயத்தில் கொஞ்சம் படத்தான் செய்தார். "காசியில் என்ன இருக்கிறது, ஸ்தல மகிமையைத் தவிர அதைத்தான் கண்டுவிட்டோமே!" என்று அவருக்குள்ளேயே ஆட்சேபணை குரல் ஒன்று ஒலித்திருந்தது. வாஞ்சியிடம் விளையாடினார். "புறப்படத் தயாரா ஐயா? பேரன் கடுதாசி வந்திருக்கிறது!" என்றார். "அடப் பாவமே! இதுதானா சமயம்? வீட்டில் அவளுக்கு இதுதானே மாசம்?" என்றார் வாஞ்சி. "காசிக்கு வருகிற ஆளைப் பார்!" என்று சிரித்தார் பசுபதி. அப்படி ஒரு நாட்டம் விளையாட்டுப் போல தொனித்துக் கொண்டிருந்தது அவர் பேச்சிலே.

வாஞ்சி அய்யரின் ஆசை என்னவென்றால், பசுபதிக்குத் துணையாகப் போனால் சமைத்துப் போட்டுச் சாப்பிட்டுக் கொண்டு, கைச் செலவுமில்லாமல் காசியில் புண்ணியத்தை வருமானமாக்கிக் கொள்ளலாமே என்பது. ஏழைக் குமாஸ்தா; காரியஸ்தர், காரியவாதி என்றபடி பல காரியங்கள் செய்தால்தானே அவரும் பிழைக்கலாம்? செய்ய மாட்டாரா? எதிர்பார்க்கமாட்டாரா?

* * *

கோடை விடுமுறை முழுவதும் பெற்றோருடனேயே தங்கிவிட வேண்டும் என்ற தீர்மானத்துடன் ஈசுவரன் வந்திருந்தான். வில் வண்டியைக் /////////////// தும், தோப்புக்குச் சென்று பனநுங்கு வெட்டித் தின்னும் சுகமும், இளநீர் வெட்டி மரநிழலில் அருந்தும் ஆனந்தமும், மாமரத்தில் ஏறி மாங்காய்களைப் பறித்துக் கூடையை நிரப்பித் தருகிற திருப்தியும், எப்போதுமே கிடைக்கக்கூடிய அனுபவங்களல்லவே! காசிப் படிப்புக்குப் பிறகு எங்கே போகவேண்டியிருக்குமோ! விடுமுறையைக் கூறு போட்டு வெளியூர் போகவேண்டாம் என்றே நினைத்தான்.

ஆனால் அவன் எதிர்பார்த்தபடி அமையவில்லை.

பசுபதிக்கும் உடம்பு படுத்திவிட்டது. "ஆமாம், வயசு ஆகிவிட்டதல்லவா? எந்த சமயத்தில் எனக்கு மேலிடத்து உத்தரவு வருகிறதோ!" என்றார் அவர். அந்த வார்த்தைகளைக் கேட்டுவிட்டதனால் ஈசுவரனுக்கு சுரத்தில்லை; சீக்கிரம் விடுமுறை தீர்ந்து விடாதா, திரும்பிப் போய்த் தாத்தாவுக்கு ஜாகை பார்த்து விடமாட்டோமா என்று அடித்துக்கொண்டது மனம். நாட்களைச் சடுதியில் விரட்ட விரும்பி, நண்பர்கள் அழைத்த அழைப்பை முன்னிட்டு

வெளியூர்களைச் சுற்றிப் பார்வையிட்டு வந்தான். குடிசைத் தொழில்கள் நடக்கும் சிறுசிறு புற ஊர்களைப் பார்த்துவிட்டு வந்த அனுபவம் புதிதுதான். அந்த மகிழ்ச்சியைத்தான் இதயத்தில் நிரம்பும்படி பரவவிட்டு, மீண்டும் காசிக்குப் புறப்பட்டான் ஈசுவரன்.

"என்னோடு இப்பொழுதே வந்துவிடுங்களேன் தாத்தா. அங்கே போனால் இடம் கிடைக்காமலா போகும்? இதற்கு முன்னேற்பாடு என்ன?" என்று அழைத்தான் தாத்தாவை.

"இந்த வயசில் எனக்கு அப்படியெல்லாம் இருப்பது கஷ்டமில்லையாப்பா? நீ போய் விசாரித்து எழுது. வாஞ்சியை அழைத்துக் கொண்டு வருகிறேன். இரண்டு மாசம் இருந்தால் போதும் எனக்கு. காசியில்தான் உயிரை விட வேண்டுமென்று அங்கேயே இருக்க ஆசைப்படுகிற ஆசாமி நானில்லையப்பா. இந்தக் காவேரிக் கரையில்தான் அது நடக்க வேண்டும் எனக்கு. நடக்கும்; வருகிறேன்; வருத்தப்படாதே, முன்னாடி நீ ஏற்பாடு பண்ணி எழுது. நான் தயார்..." என்று சுமுகமாகச் சொல்லிவிட்டார் பசுபதி.

உடற்கட்டு குலைந்துவிட்டாலும் உள்ளத்து வாத்சல்யம் குறையாத முதியவரை நன்றியுடனே சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து விட்டு நின்றான் ஈசுவரன்.

தாத்தாவும் வாஞ்சியும் இரண்டு மூன்று மாதம் குடித்தனம் செய்ய வேண்டுமென்றால் அதற்கேற்ற இடமாகத் தேட வேண்டாமா? விசாரித்துப் பார்த்தான். உடனே கிடைப்பதாக இல்லை. உடனடியாக வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்கவும் காலநிலை ஊக்கமளிப்பதாக இல்லை. கல்கத்தா பாதையில் ரெயில்களின் போக்குவரத்து சரியில்லை. மழையும் வெள்ளமும் ஆங்காங்கு தொல்லைகள் விளைவித்தன. இந்தச் சமயத்தில் பயணங்களில் அபாயம். கடிதங்கள் வழி பிசகிப் போயின, தவறின; தாமதமாக வந்தன. பழுத்த கிழவரையும், வட நாட்டையே கண்டிராத வாஞ்சியையும் வரவழைக்க இதுவா சமயம்? அவ்வப்போது ரெயில் பாதைகள் சரிப்பட்டுவிட்டாலும், இயற்கை உற்பாதங்கள் சகஜமாக வந்துவிடும் பருவம் ஆயிற்றே! துணிவு இல்லை ஈசுவரனுக்கு; துடிப்புத்தான் இருந்தது.

"ஆயிற்று; இன்னும் கொஞ்ச நாள், இத்தனைக்கும் தாத்தா என்னிடமிருந்து அழைப்பு வருமென்று எதிர்பார்க்கக்கூடமாட்டார்கள். சிரத்தையிருக்காது எனக்கு என்றே நினைத்துக் கொண்டிருப்பார்" எனத் தனக்குள் குறுகுறுப்புக் கொண்டவனாய் சிந்தித்திருந்தான். தந்தியே கொடுத்து, "வாருங்கள் தாத்தா!" என்று ஒரு கலக்குக் கலக்கி மகிழ்வித்தால் என்ன?

இந்த ஈசுவரனின் திட்டம் இப்படியிருக்கையிலே, அந்த ஈசுவரனின் சித்தம் வேறாக இருந்தது. அழைப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பசுபதீசுவரன் முந்திக் கொண்டுவிட்டார். இவன் ரயிலடிக்குப் போக வேண்டும். வாஞ்சி வருகிறார் தாத்தாவுடன், தந்தி கொடுத்துவிட்டார் தந்தை.

"அடடே!" என்று சற்றே ஏமாற்றமும் பரபரப்பும் அடைந்தான் ஈசுவரன். அவனுடைய ஏற்பாட்டின்படி ஜாகை கைக்குக் கிடைக்க ஐந்தாறு நாட்கள்தான் இருந்தன. நல்ல சத்திரமோ சாவடியோ தாற்காலிகமாகக் கிடைக்கும்; ஒருகால் காசி யாத்திரை வருகிறவர்களும் கூட்டாளிகளாயிருப்பார்கள். அதனால்தான் கிளம்பி வந்துவிடுகிறார். துணைக்கு வாஞ்சி; வரவேற்கப் பேரன். "இன்னும் ஏன் தாமதம்? போய்ப் பார்த்துக்கொள்கிறேன்!" என்ற திடம் வந்திருக்காதா? ஆகக் கூடி தாத்தா வருகிறார்.

தன்னுடைய வீட்டிலிருந்து தன்னுடைய தாத்தா வருகிறார் என்னும் களிப்பில் ஈசுவரன் திளைத்தான். பழம், பால் வாங்கி வைத்தான். "என் தாத்தா வருகிறார்!" என்று நண்பர்களிடம் சொன்னான்.

"அதற்காக என்னடாப்பா இத்தனை குஷி! எங்கள் தாத்தா வருகிறதாக எனக்குத் தந்தி வந்திருந்ததோ, நான் அதிர்ச்சியில் என்னவாகியிருப்பேனோ! சதா ஏதாவது போதனை ஓதுவார்!" என்று முகத்தை வலித்தான் ஒரு பிள்ளை.

"எனக்கு ஊரிலிருந்து எங்கள் பாட்டி வந்தால்கூட தேவலைடா. நம்மூரிலிருந்து யாராவது வருகிறார்கள் என்ற சந்தோஷம் இருக்கிறதே.... ஆகா" என்று மயங்கினான் இன்னொரு பிள்ளை.

"முறுக்கு சீடை எல்லாம் கொண்டு வரமாட்டாரா? அவர் தின்ன முடியாது; டப்பாவில் நிறைய வரும். எங்களுக்கும் பங்கு போடுவாய் அல்லவா?" என்று கேட்டான் மற்றொருவன்.

"அதென்னவோ, ஒரு பெரிய டப்பா நிறைய நேந்திரங்காய் வறுவல் கொண்டு வரவில்லையோ உங்கள் தாத்தா . . ." என்று தலையை ஆட்டி உதட்டைப் பிதுக்கி "சுவாரஸ்யமில்லை" என்று சொல்லிவிட்டான் இன்னொருத்தன்.

ஈசுவரனுக்கு அச்சமுண்டாகிவிட்டது. இந்த நண்பர்களும் தாத்தாவும் சந்தித்தால்? தாத்தாவுக்குத் தன்னிடம் எத்தனைதான் பிரியமிருந்தாலும், அந்த ஒரு ////// காரணமாகவே, அவன் கில்லாடி, இவன் வாயாடி, அது தலைப்புரட்டு, இது மண்டு" என்று விமரிசனங்கள் செய்வாரோ? இவர்களும், பெரியவர் என்ற பணிவின்றி, 'கிழம்' என்று வாலாட்டுவார்களோ?

"ஒரு நமஸ்காரம் பண்ணிவிட்டோமானால் போதும்; பெரியவர்களுக்கு மனசு அப்படியே குளிர்ந்துவிடும். அப்புறம் நாம் எந்த விஷயமாக அவர்களுடன் தர்க்கம் செய்தாலும் அது அவர்களுக்கு அதிருப்தியாக இருப்பதில்லை. வயசானவர்களுக்குத் திருப்தி சீக்கிரமே வந்துவிடுகிறது" என்று சொல்லி சிநேகிதர்களைக் கனிய வைத்தான் தாத்தா, நம்முடைய வேஷ்டியைத் தாமாகவே தோய்த்து உலர்த்திக்கொள்வார் என்றும், இத்தனைக்கும் அவர் நாளில் அவர் வகித்த உத்தியோகம் சாமானியமில்லை என்றும் தெரிவித்து பசுபதியின் மதிப்பை அவர்களுக்கு உணர்த்தி வைத்தான். வாஞ்சி அசட்டுப் பிசட்டாக நடந்து கொள்ளக்கூடும். ஆனால் "அவர் எனக்கு உறவல்லவே!" என்று தைரியம்!

மறுநாள் பொழுது புலர்ந்தது. துயில் எழும் பொழுதே எப்படியோ திருநீறு நினைவில் புகுந்தது. நெஞ்சிலே கண்ணெதிரே முப்பட்டை வெண்ணீறு தோற்றினது போல இருந்தது. "விபூதி கொடுத்தாரே! இருக்கிறதே!" என்று நினைவு வந்துவிட்டது. குளித்த பிறகு, தட்டுக் கட்டு வேஷ்டியையே உடுத்துக் கொண்டு நெற்றியில் திருநீறிட்டுக் கொண்டு கிளம்பினான். "காக்காய் பிடிக்கிறாயா தாத்தாவை?" என்று கேலி செய்தவர்களைப் பார்த்து, "இப்படி வேஷ்டியும் விபூதியுமாக அலையக் கொடுத்து வைக்க வேண்டுமே!" என்று பதில் வீசிப் போட்டுவிட்டு ரயிலடிக்கு வந்து சேர்ந்தான். மந்தகாசமுடன் நின்றபடி, தன்னைத் தாண்டி விரையும் ரயில் பெட்டிகளை உற்று உற்று நோக்கினான். பிறகு, இரண்டாம் வகுப்புகளைப் பார்க்க ஓடினான். அதில்தான் வரவேண்டும், தளர்ந்த வயதினர்; சொல்லியுமிருக்கிறார் பசுபதி, பேச்சு வாக்கிலே,

ஈசுவரன் தேடினான். தாத்தாவை மூன்றாம் வகுப்பில்தான் பார்க்க வேண்டுமா என்ற மன வருத்தமுடன் திரும்பி நடந்தான். "நீதானே ஈசுவரா? வந்திருக்கிறாயா" என்று வரவேற்றார் வாஞ்சி.

"அதோ நம்ம படுக்கையும் பையும், கொஞ்சம்தான் சாமான், கூலி வைக்கலாமோ வேண்டாமோ? இதை எடுத்துக்கொள் பத்திரமாய்" என்று ஒரு சிறிய டப்பாவை மிக நிதானமாகத் தம் கையில் எடுத்துக்கொண்டார் வாஞ்சி.

கூலிக்காரன் காத்திருந்தான். "எடு" என்று உத்திரவு இட்டுவிட்டு, வலதும் இடதுமாகக் கண்களை ஓட்டி, "தாத்தா எங்கே?" என்றான் ஈசுவரன்.

தாத்தாவா வரவில்லையா? ஜாகை ஏற்பாடு பண்ண உங்களை மட்டும் அனுப்பினாராக்கும்!"

"தந்தி வந்ததோ ஈசுவரா?"

"பின்னே நீங்கள் வருகிறதாக ஜோஸ்யமா தெரியும்? அதுதான் தந்தி வந்திருக்கிறதே பிரமாதமாய்..." பையிலிருந்து உருவித் தந்தியை நீட்டினான் ஈசுவரன். தந்தியைப் பார்க்காமலேயே பதிலளிக்க முயற்சி செய்தார் வாஞ்சி. ஆனால் அவருக்குக் குரல் எழும்ப

மறுத்தது. நீர் மல்கிய கண்களுடனேயே தந்தி வாசகத்தைப் பார்த்தார். ஒரு வார்த்தை குறைந்துதானிருந்தது அதிலே. தந்தியை அடித்தவர் அங்கே அவர்தான். அதை எடுத்தவன் இங்கே வேறு யாரோ தவறு செய்தவர் அவர் அல்ல. ஆனால் அவர் கண்ணீர் உகுத்தார். "ஈசுவரா, உன் தாத்தாவின் அஸ்திதான் இந்த டின்னில், சின்ன சட்டியில் இருக்கிறதப்பா. கங்கையில் கரைக்கக் கொணர்ந்தேன்" என்றார்.

உடம்பெல்லாம் நீராகிப் போன மாதிரி வெறும் மானிடனாக நின்றான் ஈசுவரன். வெறிக்கப் பார்த்தான், வாஞ்சி கையில் பிடித்திருந்த பொருளை.

"அப்பா எழுதிய கடிதம் வரவேயில்லையா?" என்று கேட்டார் வாஞ்சி. விம்மலையே விடையாக்கிக் காட்டிவிட்டு, ஈசுவரன் வாஞ்சியிடமிருந்த பெட்டியை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு மளமளவென்று நடந்தான்.

அகண்டாகாரமாயிருக்கும் வானவெளியில் கலந்துபோன உயிரும், சிறு கும்பத்துச் சாம்பலாக உதிர்ந்துவிட்ட உடலும் இணைந்தால் தாத்தாவைக் காணலாம் என்று நினைத்தானோ? மேலுங் கீழும் பார்த்துக்கொண்டு வாய் திறக்காமல் நடக்கிறானே!

காவிரிக் கரையிலேயே தமது காரியத்தை முடித்துக்கொண்டு அஸ்தி ரூபத்தில் கங்கைக் கரை வந்து சேர்த்தவருக்கு ஒரு குறையுமில்லை என்று அவனுக்கு யார் ஆறுதல் சொல்லுவார்?

காலம் சொல்லும். ஈசுவரன் உணர்ந்து கொள்ளுவான். "இதோ கங்கை" என்று செம்பில் கொஞ்சம் கங்கா தீர்த்தத்தை அடைத்துக் கொடுப்பதுபோல, "இதோ தாத்தா" என்று சட்டியிலிட்டு அவனிடம் கொடுக்கிறது விதி. அந்த விதி ஏமாந்துதான் போக வேண்டும். நெடிய நதியாகிய கங்கையில் அவனுடைய தாத்தா ஒன்றறக் கலந்துவிடுவார். உலகத்தையே கவிந்து தாக்கும் வானிலே கலந்து நிற்பார். அன்பு வளர்த்த இதயம் நெடுகிலும் பரவி வாழ்வார்.

"நீ இருக்கிறாய் அவருடைய பேரன், நீயே செய்" என்று அவனை நதிக்கரைக்கு நல்ல வார்த்தை சொல்லி அழைக்க வேண்டும், வந்த காரியம் முடிய வேண்டும்' என்று அசட்டுக் கவலைப்பட்டுக்கொண்டு ஈசுவரனைத் தொடர்ந்து நடந்தார் வாஞ்சி வெகு வேகமாக.

**********

(ஆனந்த விகடன், மார்ச் 5, 1959)